யாகள : காஞ்சி. மணிமொழியார் — தனி இதழ் அணா 1½
இளஞ்செழியன், B. A. (Hons.) — வெளிநாடு அணா 2

சென்னை 13 - 12—47 சனிக்கிழமை — வீச்சு 18

சு கட்டில் மன்னவர்க்கு!

ஆட்சிப் பீடம் மக்களுக்கு!

புதிய தர்பார் பிறந்த காரணம்!

ய்வீக உரிமை மண்மூடிப் போன விதம்

சூரிய குலத் தோன்றல்" ிர குலம் எங்களுடை

ி வம்சத்தவன் நான்! இந்த நாட்டை ஆளும் எனக்கும் என் சந்ததி மட்டுமே உண்டு"

ாய பரம்பரையில் வந்த ன் இந்த நாட்டை ஆளப் ன். மற்றவர்க்கு இந்த டையாது."

ர்க்கெல்லாம் அரசனை ரனே எங்கள் கொடி முதல்வன். ஆகவே ம எங்களுக்கே."

ுதி மன்னர்கள், பழங் , தமதே இராஜ்யம் கிலே நாட்ட எழுப்பிய வாதங்கள் இவை. நாம் அம்சம் என்றும், சிவனார் என்றும், தேவேந்திரன் என்றும், நான்முக தேவ பரனின் பௌத்திரனே தயாரின் தாயைப் பெற்ற தனயனின் தகப்பனார் என்றும் தெய்வீக உரிமை கொண்டாடினர் அந்தக் கால மன்னர்கள். அவர்கள் "எமக்கு வாள் சுழற்றும் வல்லமை உண்டு; வேல் வீசும் வித்தை தெரியும்" என்றுரைத்து ஆட்சிப் பீடம் ஏறியதில்லை; குடிமக்களை ஆளும் முறையும், நாட்டின் வளத்தைப் பெருக்கும் வழியும் பழுதற உணர்ந்த வெற்றியினர் யாம் என்று சொல்லி, செங்கோல் ஓச்சியதில்லை. மாற்றார்தம் அணிவகுப்பைச் சிதைத்து அழிக்கவும், பகைவர் கோட்டத்தில் தோல்விக் குரல் எழுப்பவும், சேர்ந்த நாட்டில் வெற்றிச் சங்கு ஊதவும் வேண்டுமானல் நான் அரசனாக வேண்டும்—பிறர் எவரினும் பார்க்க எனக்கே இத்துறையில் ஆற்றல் மிகவுண்டு என்று தம் வீரப் பிரதாபத்தை எடுத்துக்காட்டி பட்டத்தரசரானது மில்லை. அவர்கள் அரசு கட்டில் ஏறினர் என்றால், அது, அவர்கட்கிருந்த தகுதி, திறமை, அரசாளும் பண்பு இவற்றின் காரணமாக அல்ல; தெய்வீக உரிமையின் காரணமாக! ஆம்! அவர்கள் அப்படித்தான் கூறிவந்தனர்; நாம் அரசாளப் பிறந்தவர்கள்—ஆகவே ஆட்சிப் பீடத்தில் வீற்றிருக்கிறோம் என்றே பேசிவந்தனர். பேசிவந்தது மட்டுமல்ல. அவர்களுடைய நினைப்பேகூட அதுதான். பூர்வஜென்ம புண்ணியம் தம்மை மன்னராக்கிற்று, பூர்வ ஜென்ம பாபம் வேறு சிலரை உண்ண உணவின்றி ஊசலாடும் ஏழை மக்களாகப் பிறப்பித்திருப்பது போல என்றே அவர்கள் மனமார எண்ணினர். ஆண்டவன் சித்தம் தம்மை அரசராக்கிற்று என்பதே அவர்களில் பெரும்பாலோருடைய உள்ளத்தில் உறைந்து போயிருந்த கருத்து. உலகில் சிலர் அரசாளப் பிறந்தனர் என்பதும் மற்ற பலர் அரசர்க்கு அடங்கிக் கிடக்கவே பிறப்பிக்கப்பட்டனர் என்பதும் அவர்களுடைய சித்தாந்தம். மக்கள் என்றாலே அடங்கிக் கிடக்கவும், ஆளடிமையாய் இருக்கவும், குற்றேவல் புரியவும், இட்ட பணி செய்யவும், வேண்டும்போது போர் புரியவும், எவ்வும்போது உழைத்து உழைத்து உருமாறவுமே பிறந்த கூட்டம் என்பது அவர்களுடைய அகராதியில் குறிக்கப்பட்டிருந்த பொருள்.

இப்படிப் பட்ட நினைப்பும் நோக்கமும் மன்னர்கள் உள்ளத்தைப் பன்னெடுங் காலமாக ஆண்டுவந்த காரணத்தால்தான், மக்கள் கொதித்தெழுந்து தமக்கு உரிமை வேண்டும் என்று கேட்ட போது, மன்னர்கள் சீறினர். "பரம்பரை அடிமைகளே! உங்களுக்கும் உரிமை உணர்வேயோ?" என்று கேட்டனர்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக ஆமைகளென அடங்கிக் கிடந்த மக்கள் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்னால், முதன் முறையாக, பலப்பல நாடுகளிலும், சீறிப் போரிடும் சிங்க ஏறுகளென மன்னர்தம் ஆட்சியை மாய்க்கத்தொடங்கியபோதும் மன்னர்கள் திகைப்புண்டு போயினர். மக்களும் மன்னர்களை எதிர்க்கக் கூடும் என்பதை மன்னர்கள் நினைத்துப் பார்த்ததே கிடையாது—அதுவரை. ஆகவே தான் மக்கள் எதிர்ப்பு, அவர்கள் உள்ளத்தில் திகைப்பை மூட்டிற்று.

முனபு, மன்னர்களின்கொடுமை, எல்லை மீறிச் சென்றபோதெல்

லாம் மக்கள் கண்கள் குளமாயின. அதை அந்த மன்னர்கள் கண்டிருக்கிறார்கள். கண்டு, "இது சகஜம்" என்று சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு, தம் கோலாகல வாழ்வை வழக்கம்போல் நடத்திக் கொண்டும் இருந்திருக்கிறார்கள். ஆனால் அந்த நீர்த் துளிகளிலே நெருப்பின் அனலும் வீசும் என்பதை மட்டும் அவர்கள் நினைத்துப் பார்த்ததும் இல்லை.

பலவீனன் தேகத்திலும் சில சமயம் சிம்மத்தின் இரத்தம் ஓடும்; புழுவும் கொடுமையை எதிர்த்துத் துடிக்கும். ஓரளவு, ஒவ்வொரு கால்; வளைந்த கம்பியும் நிமிரும் பிறகு. அதுபோல மன்னர்களாலும், மன்னர்களின் பிரதானியராலும், பிரபுக்களின் கொடுமை நிறைந்த வாழ்க்கையினாலும் தம் வாழ்வு நொறுங்கிச் சிதைந்து போகக் கண்டும் பரம்பரை பரம்பரையாக பொறுமை உணர்ச்சியையே அணிகலனாகக் கொண்டிருந்த மக்கள், திடீரென ஓர் நாள், கொடுமை. தாங்க முடியாத அளவுக்கு வளர்ந்து விட்டபோது, தம்மையும் மீறி, புரட்சிப் புயல் எழுப்பினர். அத்தப் புயல் எத்தனையோ வேந்தர்களின் மணி மகுடங்களை உருட்டித் தள்ளிற்று; எவ்வளவோ சொகுசாக வழ்திருந்த "ராஜாதி ராஜ, ராஜ மார்த்தாண்ட வீரதீர கம்பீர" புருஷர்களை யெல்லாம் ஆட்சிப் பீடத்திலிருந்து விரட்டி, அடித்தது; எவ்வளவோ காலமாக மக்களைத் தம் இருப்புப் பிடியினால் கசக்கிப் பிழிந்து வந்த மதோன்மத்தர்களின் மமதையை மட்டந் தட்டிற்று. அந்தப் புயலினால், முடி சார்ந்த மன்னர் பலர் பிடி சாம்பல் ஆனதும், கோல் ஓச்சிய கரங்கள் பல கட்டை வெட்ட நேர்ந்ததும், ஆணையிட்ட குரல்கள் மக்களின் ஆணை கண்டு அஞ்சி நடுங்கியதும், அஞ்சி நடுங்கி வாழ்ந்தவர்களும் ஆணை பல பிறப்பித்ததும் ஆன நிலைமை உலகில் பல பகுதிகளிலும் ஏற்பட்டது. அந்த நிலை ஏற்படுமென மன்னர்கள் துளியும் எதிர்பார்க்க வில்லை. ஆனால், அவர்கள் எதிர் பார்க்க வில்லை என்பதற்காக, புரட்சி வராமல் இருந்து விடுமா?

புரட்சி வந்தது. வந்தபுரட்சி வெள்ளத்தில் மன்னர் பலர் முடியிழந்து, ஆட்சிப் பிடி இழந்து, வீழ்ந்தொழிந்து போயினர் என்பது மட்டுமல்ல; அவர்கள் தம் உயிர் நாடிபோல் எண்ணிக் காத்து வந்த தெய்வீக உரிமை எனும் தத்துவமும் பறிபோயிற்று. "ஆண்டவன் கட்டளையாலேயே நாங்கள் மன்னரானோம். நாங்கள் மன்னராக வாழ்வது நாங்களாக அமைத்துக் கொண்ட செயற்கை ஏற்பாடல்ல. நாங்கள் பிறக்கும் போதே மன்னராகத்தான் பிறந்தோம்" என்று அரசர்கள் கூறி வந்தார்களே தெய்வீக உரிமை, அந்த தெய்வீக உரிமையே மக்கள் புரட்சிக்குப் பின் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயிற்று.

முதலாவது சார்லஸ், இங்கிலாந்தில் பதினேழாம் நூற்றாண்டில் கோலோச்சிய மன்னன். அவன் இப்படித்தான் தெய்வீக உரிமை கொண்டாடினான். ஆள்வதற்கே நான் பிறந்தேன்-என்பால் ஆட்பட்டிருக்கவே நீர் பிறந்தீர் என்று முரசு கொட்டினான், என்னை எதிர்ப்பவர் யார் உண்டு இம் மாநிலத்தில் என்று இறுமாந்து பேசினான். "சட்ட மன்றமா— வேண்டாம். அமைச்சர் குழுவா— தேவையில்லை. பாராளு மன்றத்தைத் தவறாது கூட்டி, அதனிடம் திட்டங்களை நீட்டி, அது தரும் கருத்துரைகளைக் கேட்டு, நான் ஆளவேண்டுமா இந் நாட்டை? நான் ஒப்பேன் இக் கேட்டை" என்று இடியேறென முழங்கினான், எதேச்சாதிகார வாழ்வு நடத்தினான். முடிவு என்னாயிற்று தெரியுமோ அவன் தலை பறிபோயிற்று.

மக்கள் மன்றத்தைக் கலந்து பேசாமல், ஊரார் எண்ணத்தை உணர்ந்து கொள்ளாமல், நாட்டவர் நினைப்பு எத்தன்மைத்து என்பதை அறியவும் முனையாமல், சார்லஸ், தன் விருப்பம் போல், நாடாளக் கண்ட பாராளுமன்றம் இப்போக்கு ஆகாது என்று தடை விதித்தது. தடையை மன்னன் மீறியபோது, மன்னர் ஆட்சி நடைபெற மன்றம் பணம் உதவ மறுத்தது. மன்றத்தவர் செயல் கண்டு மனங்கொதித்த மன்னன் பாராளுமன்றமே இனித் தேவையில்லை என்று அதை மூடிவிட்டான். நாட்டில் போர் மூண்டது—மன்னவனுக்கும் மக்களுக்கும். போர் நடந்தது நான்கு ஆண்டுகள். முடிவில் வெற்றி எவர் பக்கம் என்ப

தைச் சொல்லவா வேண்டு
ல்ஸ் தோற்றான், மக்கள்
வெற்றி விழா கொண்டாடி

பாராளு மன்றம், வெற்றி
வோடு நிற்க வில்லை. நீதி
ஒன்று அமைத்தது சார்லஸ்
வாளியா அல்லவா என்பதை
மானிக்க. மன்னன் மக்களை
டிக்கொடுத்த துரோகி, வஞ்
கொடியவன் என்பது
1649-ம் ஆண்டு ஜனவரி
நாள், சார்லஸ், அவனது
அரண்மனைக்கு முன்னால்,
லேற்றப் பட்டான்.

சார்லஸ் மட்டுமே அல்ல
கள் உணர்ச்சியை மதிக்க
எத்தனையோ மன்னர்கள்
தட்ட இதே காலத்திலும், இ
பின்னரும், பல நாடுகளில்
போன்ற கோர முடிவினையே
யுள்ளனர்.

பிரஞ்சு நாட்டில் பதினாறா
தான் செய்த கொடுமைக்
கப் பெற்ற பரிசு, மரணம்.
தூக்குத் தண்டனை. மன்
மட்டுமா? இல்லை. அவன்
விக்கும் கூட.

அந்த நாட்டில், அரசனு
குடும்பத்தினரும் அவ
யொத்த செல்வ நிலையிலிரு
புக்களும் பொதுவாக "
குடியினர்" அனைவருமே,
டாளிகளை, உழவர்களை,
லாளர்களை, ஏழைகளை,
றவர்களை செல்வமும்
கும் பெருதவர்களை நடத்தி
எவர் உள்ளத்தையும் உ
தன்மையது.

* * *

"உயரப்பர்"களை
கொண்டு, "கோச்" வே
சென்று கொண்டிரு
ஏழைச் சிறுவன் ஒருவன்
சக்கரத்தினடியில் சிக்
போவான்; பிரபு எட்டிப்பா
கொஞ்சம் 'கருணை' உ
ராக இருந்தால் ஒரு எட்ட
களை வீசியெறிவார்—வ
ருந்த படியே. அது, அந்த
னின் பிரேத அடக்கச்
காக! சிறுவன் உடல் மீ
ரம் பாய்ந்ததால் ஏற்பட்ட
விருந்து இரத்தம் ஆறென
கொண்டிருக்கும் பெற்றோ
தின் மீது வீழ்ந்து
அழுது கொண்டிருப்பர்.

மை விட்டுச் சென்று
ன்ற அழு குரல் கல்
ம் கரைக்குமளவு எழும்.
, அந்தத் தெரு முழுதும்
ட்டாளிகள் கூடி நின்று
உருத்தவண்ணம் நிற்பர்.
முகமும் ஒரு சோக சித்
இருக்கும். சிலர் முகத்
ம் கோபத்தின் சாயல்
ப் படர்ந்திருக்கும். சிலர்
மட்டும் அனல் வீசும்.
களில் மட்டும் முணு
-இன்னதென்று புரியாத
ஒருவகை ஒலிகளின்
டு காணப்படும். ஆனால்
தலைகுனிந்த வண்ணம்
ப்பர். "பிரபு" இவற்
ாம் காண மாட்டார்;
கிறே! கிடக்குது நாய்
டியை ஓட்டு" என்பார்
ட்டுபவனைப் பார்த்து.
ாகும்.

ம் நெஞ்சுத் தைரியம்
யிருந்தால், மரணத்
ிய மகனின் தகப்பன்,
த் தகவல் தருவான்.
த அக்கிரமத்தை எடுத்
, அதற்கு ஏதேனும்
தேட வேண்டு மென்று
ின் மேலான கனத்
ர்த்தித்துக்" கொண்டி
பரிகாரம் கிடைக்கும்—
பரிகாரம் தெரியுமோ—
ாழ்வு. பிரபுவுக்கல்ல—
சிறைக்குப் போகப்
-மகனை இழந்து மனுப்
ழைக்கு! அவன் மனுப்
ன அந்தக் குற்றத்திற்
மாம்! எவ்வளவு
தமிருந்தால், அந்தப்
யாதி பெற்ற பிரபுவை
னுப் போட்டிருப்பான்!
தண்டனை தரத்தானே

* *

ஒருவன். பண்ணை
ன் நிலத்தில் ஒரு பகுதி
பயிரிட்டு வந்தான்.
தலைமுறையாக அவன்
கிருந்த பாத்யதை
வழக்கத்திற் கேற்பவே
ண்டும் பயிரிட்
லத்தால் விதை
யெடுத்து, நீர் பாய்ச்சி,
பயிர் வளரக் கண்டு,
ல செய்து, உரிய பரு

வத்தே அறுத்தெடுத்துக் குவித்தான் கோதுமை மணிகளை. பண்ணையார் வீட்டை கோதுமை மூட்டைகள் சென்று சேர்ந்ததும் தனக்குரிய கூலியைக் கேட்கச் சென்றான் அவரிடம். அவரோ அவனைக் கட்டி வைத்து, பணியாளைக் கொண்டு சவுக்கடி தரச் செய்தார். காரணம், சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு தரப்பட்ட கோதுமை குறைவு! அதற்கு உழவனென்ன செய்வான்! பருவ மழை பெய்யாததால் வந்த வினை அது.

* * *

இயந்திரத் தொழிலாளி வேலை முடிந்து மாலை வீட்டிற்குத் திரும்பினான். வீட்டில் தன் மகள்—அழகி—திருமணமாக வேண்டிய வயதுடையவள் காணப் படாமை கண்டு திடுக்கிடுகிறான். பிறகு பக்கத்துத் தெரு சீமான் வீட்டிற்கு அவள் "அழைத்துச்" செல்லப்பட்டாள் என்பதை அறிகிறான். பிராது கொடுக்கிறான் அதிகாரிகட்கு. விளைவு, அவனுக்குப் பாஸ்டீல் சிறைவாசம்.

* * *

பிரஞ்சு நாடு, இது போன்ற பல வேதனை வரலாறுகளின் நிலைக்களமாய் இருந்தது அந் நாள். மன்னன் லூயி, இவ்வளவு கொடுமைகள் நாட்டில் நடக்கக் கண்டும் ஏன் என்று கேட்டானில்லை. எப்படிக் கேட்பான்? அந்தக் கொடுமை பலவற்றிற்கு ஆரம்ப கர்த்தா அவன் தானே!

மக்கள் பொறுத்துப் பொறுத்துத் தான் பார்த்தனர். இந்தப் பலம்பொருந்திய அதிகார வர்க்கத்தையும் அதன் தலைமைப் பீடமான அரசர் சிங்காதனத்தையும் எதிர்ப்பது என்பது நம்மால் ஆகுமா என்று தான் வேதாந்தம் பேசிக் கொண்டிருந்தனர் பலகாலமாக. இந்தமூட்டைப்பூச்சிகளால் என்ன செய்ய முடியும்என்றே மன்னனும் எண்ணி வந்தான். பாவம், தான் இருப்பது குமுறும் எரிமலையின் உச்சிமீது என்பதை அவன் உணரவில்லை; உணர முடியவில்லை; உணர்த்தவில்லை சூழ்நிலை. ஆனால் குமுறும் எரிமலை வீறி வெடித்தது 1789 ஜூலை 14-ல்! வெடித்த வேகத்தில் அதன் மீது அமர்ந்திருந்த மன்னன் எங்கோ தூக்கி எறியப்பட்டுச் சுக்குநூறாய்ச் சிதைந்தே போயினான். ஆம்! பாட்டாளிகளின் பட்டாளம் அன்று திடீரெனக் குமுறி யெழுந்தது, பாஸ்டீல் சிறைக் கதவைப் பொடிப் பொடியாக்கிற்று. சிறையிலிருந்த தம் தோழரை யெல்லாம் வெளிக் கொணர்ந்தது. சுதந்தரம் சமத்துவம் சகோதரத்துவம் என்னும் இலட்சிய ஒலிகளை விண்முட்ட எழுப்பிற்று. புரட்சி ஓங்கிற்று. பொல்லாங்கு வீழ்ந்தது, மன்னன் தூக்கிலிடப் பட்டான் அவன் செய்த கொடுமைக்காக.

* * *

இரஷ்யாவில் கொடுங்கோலன் ஜார் மன்னன் சாய்ந்ததும், புரட்சி வீரன் லெனின் "புதியதோர் உலகு செய்வோம்—கெட்ட, போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்று புதிய பண் பாடியதும், "இது எனது என்னுமோர் கொடுமை" யில்லாத புதிய சமுதாயம் அங்கு உருவானதும் உலகறிந்த உண்மைகள்.

* * *

இங்ஙனம் மன்னர் ஆட்சி மடிந்து, மக்கள் ஆட்சி மலர்ந்த நிகழ்ச்சிகள் ஏராளம் உலக வரலாற்றில். எனவேதான், இன்று, உலகிலே மன்னர்கள் என்ற பட்டப்பெயரும் அதற்கு அடையாளமாக முடியும் தாங்கிக்கொண்டு "உலா" வருபவர்கள் பெயரளவுக்கு மட்டும் மன்னராக இருக்கவும், நாடாளும் உரிமைகளை மக்கள் தலைவர்களிடம் தரவும் ஒப்புகின்றனர். செங்கோல் அவர்களிடம்தான். ஆனால் ஆட்சிப் பொறியின் அச்சாணியைத் திருப்பும் சாவி மக்களிடம்-மக்களின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் போற்றுதலுக்கும் உரிய தலைவர்களிடம்-அத்தகையவர்களை உள்ளடக்கிய சட்ட சபைகளிடம்! இந்த நிலை இன்று ஏற்படுகிறது என்றால், இதற்குக் காரணம், மன்னர்களின் தாராள மனப்போக்கு அல்ல; குடிமக்கள் தம்மைத் தாமே 'ஆள வேண்டும்—அதுவே ஜன நாயகம் என்பதை அரசர்கள் அறிந்துவிட்டனர் என்பதும் அல்ல; முதலாம் சார்லஸ்களை, பதினாறும் லூயிகளை, ரஷ்யநாட்டு ஜார்களை வரலாற்றுச்

(10.ம் பக்கம் பார்க்க)

சாவேரி ராகம்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பிறகு இதையெல்லாம் விபரமாய் என் தந்தைக்கு முதலில் எழுதி அவருடைய பதிலுக்காகக் காத்திருந்தேன். கடைசியில் அவரிடமிருந்து பதிலும் வந்தது. ஆனால் அதைக்கொண்டு அவருடைய மனப் பான்மையைத் தெரிந்து கொள்வது என்பது முடியாததாயிருந்தது. அந்தக் கடிதத்தின் சாரம் "உடனே என்னை வந்து பார். உன் அம்மா உன்னைக் காண ஆவலோடு இருக்கிறாள்" என்றிருந்ததால் அதிலிருந்து அவர் மனக்கருத்தை எப்படி உணர முடியும்?

ஊருக்குப் புறப்பட்டுச் சென்றேன். என்னைக் கண்டதும் தந்தை முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டார். அது இனி வரும் பூசல்களுக்குப் போடப்பட்ட பிள்ளையார் சுழி என்று நான் எண்ணினேன். நான் உள்ளே நுழையும்போது அம்மா எதிரே வந்தாள்.

நான் பல வேளைகளில் அப்பாவின் சொற்களைக் கூட தட்டி நடந்திருக்கிறேன். ஆனால் தாய்—அவளுடைய சொற்களுக்கு மதிப்புத்தர என்றும் நான் பின்வாங்கியது கிடையாது. அதற்குக் காரணமும் இல்லாமலில்லை. என் தந்தையின் சொற்களில் அன்பைக் காட்டிலும்—அன்பான சொற்களைக் காட்டிலும் அதிகாரமான சொற்கள்தான் தலை தூக்கி நிற்கும். அது எனக்கு என்றைக்குமே பிடித்ததில்லை.

அதுவுமன்றி அவர் போக்கு ஒரு அலாதியானது. எந்தக காரியத்திற்கும் அவர் பஞ்சாங்கத்தை நாடாத காலமே கொஞ்சமாகத்தான் இருக்கும். நாங்கள் ஏதாவது வேலையாய் வெளியே போகவேண்டுமென்று வண்டியைக் கட்டச் சொன்னால், "இன்னும் அரைமணி நேரம் வரை இராகு காலமிருக்கிறது, அது கழிந்ததும் போங்கள்... இராகு காலமும் அதுவுமாக வெளியே போக வேண்டாம்" என்பார்.

தான் ஏராளமான சொத்து சம்பாதித்து வைத்திருப்பது தன் 'பூர்வ ஜன்மப்' பயன் என்பதும், தன் வீட்டுப் பண்ணையில் தனக்காக உழைக்கும் மக்கள் தன்னிடம் கடந்த ஜன்மத்தில் பட்ட கடனுக்காகத்தான் பாடுபடுகிறார்கள் என்பதும் அவருடைய நினைப்பு. அதை அவர் அடிக்கடி வெளியே சொல்வார்.

இதையெல்லாம் கேட்பது எனக்கு மிகவும் வெறுப்பாக இருக்கும்.

என் அன்னையார் அப்படிப் பட்டவர்கள் அல்ல; அவர்களுடைய உலகம் எங்கள் குடும்பம் தான்.

என் தந்தைக்கும் தாய்க்கும் பலவிதங்களில் வேறுபாடுகள் உண்டு. அவர் நல்ல 'வாட்ட சாட்டமாக' இருப்பார், அவளோ நெளிந்து குள்ளமாகக் காணப்படுவாள்; ஆனால் தந்தையின் முகத்தில் எப்பொழுதும் பொங்கிக்கொண்டிருக்கும் சிடுசிடுப்பிற்குப் பதிலாக அவள் முகத்தில் அன்பு தவழ்ந்து கொண்டிருக்கும்.

அவள் கோயிலிலோ குளத்திலோ ஆண்டவனை வேண்டிக் கொண்டதை நான் கண்டதில்லை. ஆனால் தனிமையில் தன் மக்களுக்காக—அவர்களின் நலனுக்காக மண்டியிட்டு இறைவனை வேண்டாமலுமிருந்ததில்லை.

என் தாயார் தன் மக்களுக்காக, தன் கையாலேயே எல்லாவற்றையும் செய்துவி[...]
மென்ற ஆசையில், எ[...]
தடவைகள் வேண்டு[...]
வீட்டில் இப்படியு மா[...]
கப் போய் வந்துகொண்[...]
பார்கள்.

அவர்கள் பாரையும்[...]
மாட்டார்கள். அவ[...]
வேண்டுகோள்களில் அ[...]
திற்கும்—அதட்டலுக்[...]
லாக உரிமையும் தாபு[...]
தான் அதிகமாகப் பிர[...]
தைக் காணலாம். அ[...]
குணங்களும் அம்மாவி[...]
பாடுகளும் இரு து[...]
என்று கூறத்தக்க [...]
இருந்தாலும் அவர்களி[...]
வாழ்க்கைப் படகை ஓ[...]
எவ்வளவு ஒற்றுமையா[...]
கிறார்கள்! எனக்குப் ப[...]
களில் அது ஒரு வி[...]
தான் இருந்தது. ஆன[...]
குக் காரணம் இல்லாம[...]
என் தாய் தன்னை[...]
உணர்ச்சிகளையே அப்ப[...]
அடிமையாககிவிட்டிருந்[...]

முதலில் குடும்பத்தி[...]
சம் சச்சரவுகள் நிகழ்[...]

தைப் பொங்கலன்று[...]
வருகிறது

வாழ்வு (மாதமிரு[...]

அறிஞர்களின் ஆரா[...]
ஆணித்தரமான அரசிய[...]
ரைகள், சுவை மிக்க [...]
கள், கருத்தாழ்ந்த க[...]
சிந்தனையைத் தூண்டும்[...]
சித்திரங்களைத்தாங்கி வெ[...]
கிறது.

தனிப் [...]
பிரதி க[...]
உள்நாடு ரூ 0-2-0 ரூ[...]
வெளிநாடு ,, 0-2-6 "[...]
எங்கும் முன்பணம் க[...]
கூடிய விற்பனையாள[...]
தேவை.

நிர்வாகி, "வாழ்[...]
கீழ இராச[...]
புதுக்கோ[...]

கள் பிறந்த பிறகு,
தான் பழக வேண்டிய
ம்—தன்னுடைய
டை அளிக்கவேண்டிய
ம் தன் குடும்பம்தான்
முடிவில் அதிலேயே
ம் ஈடுபட்டுவிட்டதால்,
னிடமிருந்த பல குறை
மறந்துவிட்டாள். அவ
றி பிறகெல்லாம் அவள்
ாக்கவலைப்படவுமில்லை,
காரணத்தை முன்னிட்
ரை எதிர்த்து நிற்கவும்

ல் பார்ப்பவர்கள் குடு
ஒற்றுமையுடன் நடக்கி
ன்பதாக நினைத்துக்
ருந்தார்கள்.

வந்த பிறகு தாய்க்கும்
கும் ஏதோ சச்சரவு
டதற்கு என்ன காரண
ம் என்று நினைத்து
ப் பார்த்தேன். மூளை
ழப்பிக்கொண்டதுதான்
விடை ஒன்றும் கிடை
.

டும்போது சிரித்துக்
ட,

ன அம்மா! உனக்கும்
ற்கும் ஏதாவது சச்ச
ந்ததா?' என்று கேட்

ா மௌனமாகவே இரு
.

மிகவும் வற்புறுத்திய
ல் எல்லாச் செய்திகளை
னார்கள்.

! எனக்காக வரிந்து
காண்டு அப்பாவிடம்
க்கு நின்றிருக்கிறார்கள்
யார்.

ல் அதை நம்பவே
ற்போய்விட்டது. சாதிக்
ட்டின் கோரத்தாண்
றைந்த சமூகச் சூழ்
வளர்க்கப்பட்டு
வரும் என் தாய்க்கா

அவ்வளவு மாறுதல் உணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ண எண்ண எனக்கு ஒன்றுமே புரியாமற் போய்விட்டது. "நீ சொல்வது உண்மையா அம்மா?" என்று கேட்டேன். "உண்மைதான். என் மகனுடைய மன நிலையை அறிந்துதான் அவனுக்காகப் பரிந்து பேசினேன். உறுதியான அவன் மன நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றால் தாய் என்று சொல்லிக்கொள்வதில்தான் என்ன பெருமையிருக்கிறது" என்றாள் பெருமிதமாக. அதைக் கேட்ட எனக்கு உண்மையிலேயே என் தாய் வணக்கத்துக்குரியவளே என்ற—உணர்ச்சி ஏற்பட்டது.

விற்பனையாளர்கட்கு!

சென்ற மாத இறுதியில் அனுப்பிய பட்டியலுக்குரிய தொகையை இன்னும் சில விற்பனையாளர்கள் அனுப்பாமல் இருக்கின்றனர். அவர்கள் அடுத்த வியாழக்கிழமைக்குள் அலுவலகத்திற்கு வரும்படியாகத் தொகையை அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அலுவலாளர்,
போர்வாள்.

என் அன்னை கூறிய அந்த நல் வாசகம் அவர்களுடைய உள்ளத்தின் ஆழத்தையும் பண்பாட்டையும் எனக்குத தெள்ளத் தெளிய உணர்த்திற்று.

ஆம்! அவர்கள் இந்தத் திருமணத்திற்குச் சம்மதம் கிடைக்கவில்லையானால் என் மனம் உடைந்துவிடும் என்பதை நன்கு உணர்ந்து மனம் கலங்கியிருக்கிறார்கள். இத்தனை நாளும் பணிந்து கொடுத்துக்கொண்டு சென்ற அவர்கள் உள்ளம் என் தந்தையை எதிர்த்துச்சச்சரவிடவும் துணியும்படியான அளவில் என் மணத்தைப் பற்றிய செய்தி அவர்கள் உள்ளத்தை ஒரு குலுக்குக் குலுக்கியிருக்கிறது. தன் குருதியை ஊட்டி வளர்த்த மகனுடைய தொடர்பை உதறித் தள்ளுவதைக் காட்டிலும் சமூகக் கட்டுப்பாட்டை உடைத்தெறிவதென்பது சுலபமாகத் தென்பட்டது போலும் அவர்கள் மனக்கண்முன்!

அப்பா, என்னிடம் முதலில் எவ்வளவோ நயமாய்ச் சொல்லிப் பார்த்தார். நான் இணங்குவதாய்க் காணோம். பணமோ சொத்தோ வராது என்ற தோரணையில் மிரட்டியும் பார்த்தார்—மிரட்டல் பலிப்பதாய்த் தெரியவில்லை. கடைசியில் நந்தனுக்கு வேதியர் சொன்னது போல அது 'பாப்பார பெண்ணடா பாபமடா என்றார்—பார்க்கிறேன் வருவதை என்றேன். கடைசியில் அன்பும் கோபமும் இரண்டும் கலந்ததால் வெளிவந்த வசைமாரியால் என்னை நிராட்டி வெளியே அனுப்பிவிட்டார்.

மனக் குழப்பத்துடன் வீடு வந்து சேர்ந்தேன்—அம்மாவின் சம்மதத்தோடுதான். அம்மா வேண்டிய உதவியை தந்தைக்குத் தெரியாமலே செய்வதாகக் கூறினாள். இது ஒரு விதத்தில் எனக்கு உற்சாகத்தை அளித்தது.

(தொடரும்)

போர்வாள்

திராவிடர் வார வெளியீடு

	உள் நாடு			வெளிநாடு		
தனி இதழ் ரூ.	0	1	6	0	2	0
ஆண்டு 1-க்கு	5	0	0	6	8	0
6 மாதங்கட்கு	2	8	0	3	4	0

போர் வாள்,
பவழக்காரத் தெரு, சென்னை.

போர்வாள்

13—12—47 சனிக்கிழமை

பட்டினிப் பட்டாளம்!

திருநெல்வேலி — அழகான சொல்! அழகு மட்டுமல்ல, கருத்துச் செறிவும் காரணப் பொருத்தமும் மிக்க சொல். திரு நெல் வேலி என்றால், அழகிய நெல் வேலிகளை உடைய வட்டாரம் என்று பொருள். விளைவு மிக்க இடம், பயிர் பச்சைகள் நிறைந்த பூமி, உணவுப் பொருளின் உற்பத்தி நிலையம், மக்கள் வாழ்வை வளமாக்கும் தாரணி, ஊரார்க்கு உணவூட்டும் ஊருணி அது என்பதை எடுத்துக் காட்டும் பெற்றிமை வாய்ந்ததே நெல்வேலி என்ற தூய தமிழ்ச் சொல். பெயரைக் கேட்டதுமே எவரும் சொல்லிவிடுவர், அந்த வட்டாரம் வளவயல்கள் நிறைந்த பகுதி என்பதை. ஆம்! நெல்வேலி என்பது காரணப் பெயர்; நெல்வேலிகளைத் தன்னகத்தே கொண்டிருந்த காரணத்தால் ஏற்பட்ட பெயர்.

ஆனால் காரணப் பெயர் இடுகுறியாயிற்று (பொருள் இல்லாச் சொல்லாயிற்று) இந்நாள். நெல்வேலியில் நெல் இல்லை. அங்கு வாழும் மக்களுக்கு உண்ண உணவில்லை. உண் பொருளைத் தரவேண்டிய வயல்களிலோ ஒன்றுமில்லை. பயிர்களைத் தட்டி எழுப்பக் கூடிய ஆறுதல் படைத்த மழைபோ பெய்யவில்லை. பங்கீட்டுக் கடைகளிலோ வாரத்திற்கு மூன்று நாட்களுக்கு மேல் அரிசி இல்லை. வேளைதோறும் உணவுண்ணும் கடமை ஒன்றைத் தவிர வேறு ஏதும் அறியாத, வயிறோ கேட்கவில்லை.

என் செய்வர் மக்கள்? "ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்—இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - இடும்பைகூர் என் வயிறே, உன்னோடு வாழ்தல் அரிது" என்று அன்றோர் நாள் பசிக் கொடுமை தாங்காத போது அவ்வையெனும் தமிழ்க் கிழவி கூக்குரல் எழுப்பினளாமே, அது போல, வேதனை வெண்பா பாடிக்கொண்டும், வறுமை இல்லை எனினும் உணவு இல்லை என வாடும் தம் குடும்பத்தவரை உடன் அழைத்துக் கொண்டும், 'அம்மா, சோறு எங்கேயம்மா! பசிக்கிறதே' என்று தம் மெலலிய குரலால் பட்டினியின் கொடுமையை வெளிப் படுத்தி நீள அழத்தொடங்கும் தம் சின்னஞ் சிறு குழந்தைகளைக் "கொஞ்சம் பொறு, இதோ தருகிறேன்" என்னும் இங்கித வார்த்தைகளால் ஆற்றியும் தேற்றியும் அமைவுறச் செய்து கொண்டும், "சே! இது என்ன வாழ்வு, உண்ணவும் உணவில்லையே!" எனறு, சலிப்பு—துக்கம்—சோர்வு—பசி இத்தனை உணர்ச்சிகளிலும் வார்த்தைகளைத் தோய்த் தெடுத்து வீசும் தம் இலலக் கிழத்தியர்க்கு ஆறுதல் மொழி பல கூறிக்கொண்டும், "அவர்க்கெல்லாம் ஆறுதல கூறினீர்—எனக் கென்ன சொல்வீர்" என்று தம்மையே கேட்கும் தம் உள்ளங்கட்கு "இரு! பொறு! அடுத்த கிராமம் போய்ப் பார்ப்போம்" என்னும் சொற்களையே மறு மொழியாய் அளித்துக் கொண்டும், ஏராளமா
நெல்வேலி மாவட்டத்
தஞ்சை, மதுரை ம
களுக்குப் பயணம்
விட்டனராம்.

நெல்வேலியில்தான்
வில்லை; தஞ்சை தமிழ்
நெற்களஞ்சியமாயிற்
சென்று பார்ப்போம்;
அடுத்த மாவட்டம்
அங்கும் செல்வோம்;
லாம் கூடவா உண
போய்விடும் என்ற
லேயே அப் பட்டினிப்
ளங்கள் நெல்வேலி
மதுரை தஞ்சை பகுதி
அகதிகள் போல,
ணம் தொடங்கியிரு
டும்.

சங்கரன் கோயில்,
ஞர், குளத்தூர்,
பட்டி, விளாத்தி குள
டியாபுரம் முதலிய பல
லும், இராமநாதபுரம்
டத்தின் பல பகுதி
பட்டினி, அதன் முழு
திலும் தாண்டவமாடு
றும், அந்தப் பகுதிக
தான் குறிப்பாக,
பட்டாளங்கள் வரிசை
யாக வேற்றுத் திசை
செல்கின்றன என்
குள்ளவர்கள் மொச்ச
நிலக்கடலை இவற்றை
உயிருக்கும் உ
இடையேயுள்ள தொ
றுப்போகா வண்ணம்
போற்றி வளர்க்கும்
பார்க்கப் பரிதாபமா
தென்றும் சங்கரன்
வட்டாரததில் அரிசி,
சந்தையில், படி
ரூபாய் என்பது போ
யில் விற்கப்படுகிறது
கிடைப்பதரிது என்
மான செய்திகள்—
அவை! தமிழ்த் திரு

தந்த கண்ணீர்—பத்திரிகை
ல் வந்த வண்ணமுள்ளன

இந்தச் செய்திகள் ஆதார
றவை என்று சொல்வதற்கு
லை. இவை அத்தனையும்
மை என்பதை வலியுறுத்தி
லை மாவட்ட காங்கிரஸ்
வர் அறிக்கை விடுத்துள்
. எனவே இவற்றின் உண்
மை ஐயுறுதற்கு இடமில்லை.
றுக் கட்சியினர் அறிக்கை
இருப்பினும், ஒருவேளை,
வந்தார்க்கு நாடாளும்
மை இல்லை என்பதைக்
ட இப்படியெல்லாம் இட்
ட்டியும், பொய்யுரை புனை
, உள்ளதைத் திரித்தும்,
பதை மறைத்தும் பேசு
னர் என்று கூறிவிடலாம்.
ல் இப்போதோ அவ் வண்
மல்லாம் கூறிட வழியு
. அறிக்கை தந்துள்ளவர்
டர் கழகத் தலைவரல்ல;
கொடிக் கழகச் செயலா
ல்ல; ஜெயப் பிரகாஷ்
யணனின் தோழர்கள் கூட
; எதிர்க் கட்சியினர் அல்
மாறுக் கட்சியினர் எவ
அல்ல ஆனால் காங்கிரஸ்
! ஏதோ சிற்றூர்த் தலை
ல்ல; ஊர் பேர் தெரியாத
மல்ல—பொறுப்பற்றவர்
சொல்லி அவர் பேச்
தட்டிக் கழித்துவிட. அறி
தந்தவர் நெல்லை ஜில்லா
ரஸ் தலைவர்; ஆச்சாரியார்
ராஜர் போராட்டம் முன்
நாள் மூண்டெழுந்த
ஆச்சாரியார் பக்கம்
போராடியவர். எனவே
வேலியில் பட்டினிப் பட்
கள் பல உலவுகின்றன
தை எவரும் மறுத்தற்
. மறுப்பதால் ஆய பயன்
இல்லை.

ல் வேலித் தலைவர் மட்டு
உணவு அமைச்சர் டாக்டர் டி. எஸ். எஸ். இராஜனே சட்ட மன்றத்தில் திட்டமாகக் குறிப்பிட்டிருக்கிறார் நெல்வேலியின் உணவு நிலை மனதிற்கு இனியது அல்ல என்று! அது மட்டுமல்ல, அவர் மற்றொரு பயங்கரமான தகவலும் தந்திருக்கிறார் அது உண்மையிலேயே தமிழராயினோர் அனைவர் உள்ளத்தையும் உருக்கும் தன்மையது. அந்தச் சேதி உண்மையானது என்று ஏற்படுமானால், தமிழகத்திலேயும் ஒரு 'வங்காளம்' ஏற்பட்டுவிட்டது என்று பொருள்; பட்டினி, பஞ்சம், பசி, இவற்றின் விளைவான பயங்கர மரணம் தமிழகத்தில் நுழைந்துவிட்டது என்று பொருள்; "நளிர் புனல் நன்செய், விளைவுறு செந்நெல், நறுநெய் தயிரொடு நிறைபடு சோறும், எளிமையை நீக்கும் ஈவோர் கூட்டமும் எய்திய நாடு" என்றெல்லாம் புலவர் தம் பொன்மொழியால் நீராட்டப்பட்ட தமிழ் நாடு பட்டினித் தேவதையின் பதைபதைப்பு வாசகங்களால் தாலாட்டப்படுகிறது என்று பொருள்; "கத்தும் கடல்தரு முத்துக் குவியல், கமழும் கூந்தல் தமிழப் பெண்கள், தித்தித் திடுமொழி மாதர், உலகைத் தேற்றும் அறமே செய்" தமிழர் நாடு, சோறு காணாது செத்து மடிந்தாரை உடைய நாடு என்னும் பழிச் சொல்லை ஏற்கத் "தயார்" கூறுகிறது என்று பொருள்.

இதோ அந்தச் சேதி:

கோயில்பட்டி என்னும் சிற்றூரில் நால்வர் பட்டினியால் மரண மடைந்தனர் என்று காங்கிரஸ் கமிட்டியிலிருந்து எமக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. இது பற்றிய முழு உண்மையையும் தெரிவிக்குமாறு நாங்கள் திருநெலவேலி கலெக்டரைக் கேட்டுள்ளோம்."

எவ்வளவு வேதனை தரும் செய்தி! நால்வர் மாண்டனர்! பட்டினியால்! தமிழகத்தில்! பொன் விளைந்த பூமியில்! திருநெல்வேலிச் சீமையில்! நம்பவே முடியவில்லையே இதனை!

அந்த நால்வரும் வாழ்க்கைப் பாதையிலிருந்து வழுவி, மரணம் எனும் படுகுழியில் காலிடறி வீழ்ந்தபோது, பட்டினி, மயானத்தின் வழியாக மரணபுரிக்கு அவர்களை மடமடவென இழுத்துச்சென்றபோது, என்னென்ன எண்ணங்கள் அவர்கள் உள்ளத்தில் அலைமோதினவோ, யார் அறிவார்!

"தமிழகமே! நாங்கள் செல்கிறோம். வாழும் வழியிருந்தும் உண்ண உணவில்லாததால் நாங்கள் செல்கிறோம். நீ எங்களைப் பெற்றாய், போற்றினாய், வளர்த்தாய், அன்புத் தொட்டிலில் எமைக் கிடத்தினாய், வாழ இடம் தந்தாய், வாழ்வதற்கு வழியும் தந்தாய், ஆனால் உண்பதற்கோ உணவு தரவில்லை. எனவே செல்கிறோம். பசியும் பட்டினியும் எமைத் துரத்தி அடிக்கும் அந்தக் "கண்காணாப் பூமி"க்குச் செல்கிறோம். "கண்டாரும் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்" என்றுரைக்கப்படும் அந்த இடத்திற்குச் செல்கிறோம். உன்னால் கைவிடப்பட்டோம், ஆகவே செல்கிறோம்" என்று அவர்கள் தமிழகத்தைப் பார்த்துச் சொன்னார்களோ இல்லையோ, நிச்சயம் அவ் வண்ணம் நினைத்திருப்பர். நினைத்திருந்தால், அது தவறு என்று யார்தான் எப்படிக் கூறமுடியும்?

தமிழ்நாட்டில், நெல்வேலியில், பட்டினிப் பட்டாளங்கள்

உலவுகின்றன என்னும் சேதி ஒருபுறமும், கோயில்பட்டியில் பட்டினிச் சாவுகள் நான்கு நிகழ்ந்தன என்னும் சேதி மற்றோர் புறமும் தினத்தாள்களில் காணப்படும் இதே சமயத்தில், அவற்றின் இன்னொரு பக்கத்தில், அரசியலார் உணவுக் கட்டுப் பாடுகளையெல்லாம் எடுக்க முடிவு செய்துவிட்டனர் என்னும் சேதியும் காணப்படுகிறது.

இது மிக மிக விபரீதமான முடிவு. இது, பல ஆபத்தான விளைவுகளைத் தரக்கூடும்.

கட்டுப்பாடு என்னும் சொல் இருக்கிறதே, இது யாருக்கும் பிடிக்காத ஒன்று. தனக்கு விருப்பமுள்ள கடைக்குச் சென்று, தன் விருப்பம்போல் விலை பேசி, தன் மனம் விரும்பும் பொருளை, தான் விரும்பும் நேரத்தில், தனக்குத் தேவையான அளவு வாங்கும் உரிமை தனக்கு இருக்கவேண்டுமென்று ஒவ்வொரு மனிதனும் விரும்புவது இயற்கை. கட்டுப்பாடா அதனை உடைத்தெறி என்றே எவருக்கும் சொல்லத் தோன்றும். கட்டுக் காவல் அற்ற வாழ்க்கை முறையையே மனித உள்ளம் நாடும். கட்டுப்பாடுகள் முறிகின்றன என்ற சேதி கிடைத்ததும் மக்களில் பலர் மகிழ்வதற்கான காரணம் அதுதான்.

ஆனால் வாங்கும் உரிமை மட்டுமிருந்தால் போதாது. பொருள்கள் வேண்டும் அளவுக்குக் கிடைக்கவேண்டும். பொருள்கள் வேண்டும் அளவுக்குக் கிடைக்காமற்போய், வாங்கும் உரிமை மட்டும் இருந்தால் சிறிதும் பயனில்லை.

"கந்தப்பா! அரிசிக் கட்டுப்பாடு இனி இல்லை. நீ விருப்பம் போல் வேண்டும் அளவு அரிசி வாங்கிக்கொள்ளலாம்" என்று சொன்னால் கநதப்பன் உள்ளம் மகிழத்தான் செய்யும். ஆனால் கடைக்குச் செல்லும் கந்தப்பன் அங்கு **அரிசி இல்லை** என்று தொங்கும் பலகைகளைக் காணும் போது, அவன் உள்ளத்தில் பிறந்த மகிழ்ச்சி மங்கும், பிறகு மறையும். கடைக்குக் கடை அலைந்து திரிந்து, "அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்திருக்கும்" **அரிசி இல்லை** என்னும் எழுத்துக்களைக் கண்டு கண்டு சலித்த கந்தப்பனின் செவிகளில் யாரேனும் கூறுவர், அதே கடைகளில் அரிசி இருக்கிறது உள்ளே, மறைவாக, ஏராளமாக ஆனால் அவனுக்கு எட்டாத உயரத்தில் (விலையில்) என்று. பிறகு, கந்தப்பன்—கட்டுப்பாடுகள் ஒழிக என்று முன்னே குமுறிய உள்ளத்துடன் கூவிய அதே கந்தப்பன்—கட்டுப்பாடுகள் மீண்டும் வேண்டும் என்று உரத்த குரலில், வேதனை தோய்ந்த குரலில், கூவத்தான் தொடங்குவான.

ஆகவேதான் நாம் கூறுகிறோம், இன்றுள்ள நிலையில், அரிசி வேண்டுமளவு கிடைக்காத நிலையில், எட்டு அவுன்ஸ் அரிசிக்குக்கூட பிற நாட்டார் கைபார்த்து நிற்கவேண்டிய நிலையில், அந்த அளவரிசியும் கிடைக்காது பட்டினிப் பட்டாளங்கள் திரண்டு திரண்டு நாட்டில் உலவிவரும் இந்நாளில், கோயில்பட்டி மரணங்கள் நாட்டைப் பார்த்து நகைப்பை முழக்கும் நேரத்தில், உணவுக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது தவறு. தவறு மட்டுமல்ல, குற்றம். மதிப்பிற்குரிய காந்தியாரே கூறினாலும் குற்றம் குற்றம் தான்.

உணவுக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, பங்கீட்டுத் திட்டம் எடுக்கப்பட்டு, அளவரிசி
முறை நீக்கப்பட்டால், அரி
அரசியலார் குறிப்பிடும் வி
குக் கிடைக்காது. விலை உயரு
மேலும் மேலும் உயரும். ஏ
மக்களின் கரம் தாவமுடிய
உயரத்திற்கு விலை ஏறும். வி
ஏற நாங்கள் விடமாட்டோ
விலையை சட்டத்தால் திட்
படுத்தி விடுவோம் என்று ஆ
வந்தார்கள் கூறுவராயின், வ
கர்கள், அரிசி இல்லை என்
கூறிவிடுவர். உண்மையிலே
அவர்களிடம் அரிசி இல்லாம
போய்விடுமோ? போகா
அரிசி இருக்கும்; ஆனால் அ
கள்ளத்தனமாக விற்கப்ப
அதிக விலையில். பணமுடை
வர்கள் எந்த விலையாயினும்
என்று வாங்குவர்; ஏழை
கூட்டம் என் செய்வோ
என்று கை பிசைவர். சமு
யத்தின் மேல் தளத்தில் இன்
புரிப் பயணம் செய்பவர்க
மட்டுமே வாழவும், அத
அடித்தளத்தில் உலவும் பா
டாளிகளின் பட்டாளம் உண
பெறமுடியாது ஒடுங்கிச் சாக
மான நிலையே அன்று ஏற்பட்
இந்நிலை ஏற்படலாமா? ஏற்ப
விடுவது முறையா! அ
எனில், உணவுக் கட்டுப்ப
இப்போது எடுபடக்கூடாது.

**"வங்காளப் பஞ்சத்தில் உ
வின்றி மாண்ட ஒவ்வோர் உயி
கள்ள வாணிபம் செய்தார்க்கு
யிரம் ரூபாவைச் சம்பாதித்
கொடுத்தது."** என்று வங்கா
பஞ்சத்தை விசாரணை செ
குழுவினர் முன்பு குறிப்பி
னரே, அதன் கருத்தை, உ
வுக் கட்டுப்பாடு வேண்ட
என்பவர்கள் அனைவரும்
குணரவேண்டும். கட்டுப்பா
டுத் தளர்ச்சி, சிலர் கூறுவ
போல, உழவர்களின் உற்ப
உணர்ச்சியையும் ஊக்கத்தை
உற்சாகத்தையும் ஒருக்கா
அதிகப்படுத்திவிடாது; மா

...சிய ஏடு "இந்தியன் எக்ஸ் ...ஸ்" கூறுவதுபோல, பஞ்சத் ...ல் அடிபட்டு இறந்துபோன ...தர்களின் எலும்புக்கூடுகளை ...க்கிவைத்து, அதன்மீது ஏறி ...ன்று கோரத் தாண்டவம் ...ய எண்ணும் இருட்டுச் ...தையாளரின் எக்காளத் ...யை மிகுதிப்படுத்தும்.

...கட்டுப்பாடு, பங்கீடு முறை ...த் தளர்த்துவது தற்காலிக ...ன பரீட்சார்த்த ஏற்பாடே. ...டுப்பாடு இல்லை என்பதைக் ...ணமாகக் கொண்டு அரிசி ...க்கப்பட்டு மக்கள் துய ...க்க நேருமாயின் மீண்டும் ...டுப்பாடுகளையும் பங்கீட்டு ...றைகளையும் கொண்டுவர அர ...லார் சிறிதும் தயங்கமாட் ...ர்கள்" என்று சென்னை ...ாண அரசியலாரும் இந்திய ...சியலாரும் ஒருங்கு தெரிவிக் ...றனர். தெரிவித்து என்ன ...ன்?

...ட்டுப்பாட்டுத் தளர்ச்சியின் ...ணமாக உணவு நெருக்கடி ...பட்டு,—ஏற்படுவது உறுதி— ...ரசம் மாவட்டந்தோறும் ...னி வந்து, பட்டினிச் சாவு ...கெங்கும ஏற்பட்டு, மக்கள் ...ந்து, எலும்பு மலைகள் அடுக் ...பட்டபின், மரணபுரியின் ...ழப்பு ஏழை மக்கள் அனை ...கரங்களிலும் நீட்டப்பட்ட ..., உணவு இல்லையே என் ... பரிதாபக் குரலை எழுப்பிய ...ணம் பாட்டாளிகளில் பலர் ...த உலக' வாழ்வு நோக்கி ...திப் பயணம் தொடங்கிய ... இன்று கட்டுப்பாடு வேண் ...என்று கூவுபவர்கள் அத் ...பெரும் கண்ணீர் விட்டுக் ...ழுது, தம் தவறுதனை ...ணி எண்ணி நெஞ்சுருகித் ...மமே தாம் நொந்து, தம் ...க்குப் பிராயச்சித்தம் ...டோ உண்டோ என்று ...றமே பேசுகின்றனர். அரற் ...லும் என்ன, அழுதாலும் என்ன, தம் தவறை எண்ணி எண்ணி நெஞ்சு நொந்து கூவினாலும் என்ன, மாண்ட உயிர்கள் அன்று மீளவா செய்யும்? சிதைந்த குடும்பங்கள்தாம் பழைய படி முழு உரு எய்தவா முடியும்?

இது ஒரு சோதனைதானே என்று அரசியலார் கூறக்கூடும். சோதனைதான். ஆனால் சோதனை மக்களின் உயிரைப் பொறுத்தது. ஆகவே மிக மிக ஆபத்தானது. சோதனையில் சிறிது தவறினாலும் ஏராளமான மக்களைப் பலிபீடத்திலே தான் காணமுடியும்—உயிர் நீங்கிய உடலங்களாக. ஆகவே நாம் சென்னை அரசியலாரை எச்சரிக்கிறோம், பலமாக எச்சரிக்கிறோம், பிற கட்டுப்பாடுகளைப் பற்றி நமக்குக் கவலையில்லை—அவற்றால் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகமிருக்க முடியாது—ஆனால் உணவு மக்களின் உயிரை நிர்ணயிக்கும் பொருள்—ஆகவே உணவுக் கட்டுப்பாட்டைப் பொறுத்தவரை அழுத்தந் திருத்தமாக எச்சரிக்கிறோம், கட்டுப்பாட்டைத் தளர்த்துவதால் பட்டினிச் சாவு ஏற்படாது என்று ஐயந் திரிபிற்குத் துளியளவும் இடமின்றி உறுதி கூற முடியுமானால் மட்டும் கட்டுப்பாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தளர்த்துங்கள். அந்த உறுதி கூற முடியாதென்றால் தயவு செய்து கட்டுப்பாட்டில் கை வையாதீர்கள்: பட்டினிப் பட்டாளங்களைப் பெருக்காதீர்கள்; கோயில்பட்டி மரணங்களை நித்திய நிகழ்ச்சி ஆக்காதீர்கள்; "வங்காளத்தை"ச் சென்னைக்கு அழைக்காதீர்கள்; "டெல்லி"யின் தாக்கீது எவ்வண்ணமிருந்தாலும், "எம் மாகாண நிலை கட்டுப்பாட்டைத் தளர்த்த இடம் தராது" என்பதை அறிவிக்க மறவாதீர்கள்—மறவாதீர்கள்.

இனாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி கவலை வேண்டாம். சிறந்த முறை. உயர்ந்த வைத்தியம். விபரத்திற்குத் தபால் தலையுடன் எழுதவும்.

ஜெயராம் வைத்தியசாலை

28. காசி விஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.

போர்வாள்

பொங்கல் மலர்

பக்கம் 60 விலை அணா 8

தனிப்படி வேண்டுவோர் 0-9-0 தபால் தலை அனுப்பவும்.

சிறந்த கதைகள், கட்டுரைகள், கவிதைகள் கொண்டது.

அழகிய அமைப்புடையது.

விற்பனையாளர்கள் தேவையான படிகளுக்கு, படிக்கு 4 அணா வீதம் முன் பணம் அனுப்பிப் பதிந்து கொள்ளவும்.

சொற்ப படிகளே அச்சிடப் படுகின்றன. வேண்டுவோர் உள்ளூர் விற்பனையாளரிடமோ, அல்லது நேரில் எம்மிடமோ பதிந்துகொள்ளவும்.

"போர்வாள் நிலையம்"

147, பவழக்காரத் தெரு, சென்னை 1.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சுவடி சுட்டிச் சுட்டிக் காட்டுகிறதே, அதுதான் உண்மையான காரணம். அது ஒன்றுதான் உண்மையான காரணம்.

*   *   *

இப்போது இந்தச் செய்தியைப் படியுங்கள். செய்தி போர்வாளின் தயாரிப்பு அல்ல; தினசரி ஏடுகளில் காணப்படுவதுதான்.

கட்டாக் நவ. 21—

ஒரிசா தனியரசுகளில் ஒன்றான ஆட்கார் தனியரசு மன்னர் மற்ற ஒரிசா மன்னர்களுக்கு எழுதியுள்ள திறந்த மடலின் சில பகுதிகள்:—

"நான் சொல்வதிலிருந்து என்னைப் போல்ஷ்விக் என்று கருதிவிடாதீர்கள். நம் வர்க்கம் இப்போது அவசியமில்லை. மன்னர்கள் என்று நம்மை அழைத்துக்கொள்ளும் நாம், நம் குடிமக்களில் அறிவாளிகளின் நம்பிக்கையை இழந்துவிட்டோம். படிப்பு வாசனையில்லாத ஏழை மக்களின் கண்மூடித்தனமான பற்றுதலைக்கொண்டு இதுவரை நாம் வாழ்ந்து வந்தோம்.

"மக்களின் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ள இனி நமக்கு உரிமை இல்லை. நாம் முணு முணுக்காமல் நம் இடத்திலிருந்து விலகிவிட வேண்டும். அதாவது மக்களின் தலைமை ஸ்தானத்திலிருந்து நாம் விலகி, அவர்களுடைய பிரதிநிதிகள் வர அனுமதிக்கவேண்டும். எனவே தாமதமின்றி நாம் பொறுப்பாட்சி வழங்கவேண்டும். தாமதத்தால் அபாயமுண்டு என்பது இப்பொழுது நன்றாய்த் தெரிகிறது. மக்கள் நலனோடு நம் நலனைக் கலக்காவிட்டால், நம் அரசியல் பொருளியல் வாழ்வும், உயிருமே கூட போய்விடும். நம் சொந்தச் செல்வினத்தின் மீது மக்கள் சட்டசபை வாக்களிக்கக்கூடாது என்ற நிபந்தனைகூட இனித் தேவையில்லை."

*   *   *

இப்போது சொல்லுங்கள், சார்லசும் லூயியும் ஜாரும் உங்கள் மனக்கண்முன் நிழலாடுகின்றார்களா, இல்லையா?

—

சுடலையின் நடுவே!

[ஆசிரியர்: மனோகரன். விலை ரூ. 1-0-0. கிடைக்குமிடம்: செல்வி அலுவலகம், நாகர் கோயில்.]

நூலின் தலைப்பு பயங்கரமானது என்றாலும், உள்ளுறை, படிப்பவர் சிந்தனைக்கு விருந்து. மதம் முன்னேற்றத்திற்கு முட்டுக் கட்டையான தெப்படி என்பதையும், மக்களின் அறிவு வளர்ச்சிக்கு அது தடை விதித்த வரலாற்றையும், மனிதனுக்காக மதமே தவிர மதத்துக்காக மனிதன் அல்லன் என்பதையும் மலையாள நண்பர் மனோகரன் விறுவிறுப்பான தமிழ் நடையில் விளக்குகிறார். "ஏ மதமே, நீ அழிந்து போ! அந்த அழிவுப் புதைகுழியிலே பொன்னுலகொன்றை நாங்கள் சிருஷ்டி பண்ணுவோம். கொலைக் காண்டங்கள், பழிப் படலங்கள் அங்கே காணப் பட மாட்டா. சமத்துவ கீதங்கள் சகோதர எண்ணங்கள் இவை அங்கே தலைதூக்கும்." என்று ஓர் இடத்தில் ஆசிரியர் குறிப்பிடுவது மிகவும் பொருத்தமாக அமைந்துள்ளது.

—

முக்கிய அறிவிப்பு

"தமிழன் தொடுத்த போ[ர்]
புத்தகம் அச்சு முற்றிலும் முடி[ந்து]
படங்கள் இணைக்கப் பட்டு
கின்றன. பல அறிஞர்களின் [மதிப்]
புரை எதிர்பார்க்கப் படுகி[றது]
'பைண்ட்' முடிந்து வெ[ளிவர]
இன்னும் இரண்டு வாரங்க[ளாகு]
மென்பதை ஆவலோடு புத்தக[த்தை]
எதிர்பார்க்கு மன்பர்களு[க்குத்]
தெரிவித்துக் கொள்ளுகிறோம்
தகம் தயாரானதும் தாமதமி[ன்றி]
உடனே அனுப்பி வைக்கப்ப[டும்.]

இனும்—ஜமீன் ஒழிப்[பு]

30—11—47 மாலை தண்டு
ஜின்னா திடலில், தோழர்
முகனார் தலைமையில் உள்ளூர்
விடர் கழகத்தின் சார்பில்
பெற்ற மாபெரும் பொதுக்
டத்தில் தோழர்கள் மா. இ
செழியன், ஈரோடு பாலகுரு
யோர் இனம் ஜமீன் இர
ஏன் ஒழிய வேண்டும் எ
பற்றிச் சொற்பொழி வாற்றி
கேட்கப்பட்ட ஏராளமான கே
களுக்கு ஆணித்தரமான
அளிக்கப் பட்டது. கூட்
தொடங்கு முன் இரண்டு
களில் கருப்புச் சூழ்நி
சிகப்பு வட்டம் பொறித்த
விடர் கொடி ஏற்றுவிக்கப்
டது.

பகுத்தறிவு இளைஞ[ர்] க[ழகம்]

6—12—47 சனிக்கிழமை
காஞ்சீபுரத்திற் கடுத்த அ
பேட்டை கிராமத்தில் நடை
பெரிய பொதுக் கூட்ட
"போர்வாள்" ஆசிரியர்
இளஞ்செழியன் B. A. (H
அவர்களால் பகுத்தறிவு இ
கழகம் திறந்து வைக்கப் ப
விழாவிற்குத் தோழர் பழனி
கள் தலைமை தாங்கின
தோழர்கள் "திராவிடன்"
யர் என். வி. நடராசன்,
எம். அண்ணாமலை, இராசகோ
ஆசிரியர் கந்தசாமி ஆ
பகுத்தறிவு வளர்ச்சி குறி
தற்கால அரசியல் நிலை ப
சொற்பொழி வாற்றினர்.



ற இதழின் தொடர்ச்சி]

படிப்பிற்காக ஊரைவிட் ம்புப்போது என் தாயார் க வேண்டிய சாமான் மூட்டை கட்டிக்கொண் ள். நான் அருகில் நின்றேன்.

ண்ணு, உன் படிப்பெல் முடிய எவ்வளவு காலமா என்றாள்.

தற்காக அம்மா கேட்கி என்றேன்.

ல்லை, சீக்கிரமே முடிந்து ல் உன் அப்பா எல்லாப் பையும் உன்னிடம் ட்டு 'ராமா—கோவிந்தா' நிம்மதியாக இருப்பார். பேரனோடோ அல்லது யோடோ கதை சொல் ண்டு களிப்போடு த ஓட்டுவேன்.''

ன் அம்மா; உனக்குக் சொல்லுவதற்காக அல் ட்பதற்காக, ஒரு பேர பேத்தியையோ அளிப்ப ட்டிலும் உன் மகன் ற்குச் செய்ய வேண்டிய ஒன்றுமே இல்லையா '' என்று கேட்டேன்.

தோ பார் கண்ணு! நீ ன். இன்னும் படிப்ப நகரத்திற்குப் போகி உன்னால் என்ன மாதிரி மானாலும் பேச முடி தற்கு உன்னுடைய நிறைப சொல்லிக் இருக்கலாம். உன்னு டைய உலகம் வேறு எங்கெங்கேயோ இருக்கலாம். ஆனால் என் படிப்பெல்லாம் என் தாயிடமிருந்துதான் — எங்கள் குடும்பத்திலிருந்துதான். ஆகையால் என் உலகம் — கடமை எல்லாம் இந்தக் குடும்பத்திற்குள்ளேதான் அடங்கிக் கிடக்கிறது. என்னால் இதற்கு மேலாகத் தாவ முடியாது. ஆகையால் சீக்கிரமே நீ உன் தாயையும் தந்தையையும் திருப்தி படுத்தித்தான் ஆகவேண்டுமென்றாள். இதைக் கூறும்போது அவள் தனக்கு ஒரு மருமகள் வேண்டுமென்பதற்காக எவ்வளவு கவலை கொண்டிருக்கிறாள் என்பதை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது.

ஆனால்...அத்துடன் என் சிந்தனை கலைந்தது.

4

அந்த அமைதியான இரவில் குழல்கொண்டு ஊதவேண்டுமென்று விரும்பியதால் குழலை எடுத்து ஊத ஆரம்பித்தேன். ஆம் அது சாவேரி ராகமாகத்தான் இருந்தது. ஊதினேன்— என்னை மறந்து இசை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கினேன். மற்றொரு மூலையிலிருந்து, கௌரி, வீணையின் நாதம் ஒலிக்க, மிதந்து வந்துகொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் அவள் முகத்தில் புன்னகை பூத்தது. அந்த ராகமும் எனக்கு அறிமுகமான இராகமாகத்தான் இருந்தது. அவள் அருகில் நெருங்க நெருங்க அவளுடைய வீணையில் எழுந்த நாதமும் சாவேரி ராகம்தான் என்பதை நான் நன்குணர்ந்து கொண்டேன். அவள் என் பக்கம் வந்து நின்றாள். நான் பேசத் தொடங்கினேன்.

'கௌரி!'

'என்ன சொல்லுங்கள்'

'நாம் கொண்டுள்ள இலட்சியம் ஈடேறுமா?'

'சந்தேகம்தான் அன்பே!'

'ஏன் கௌரி?'—அதைச் சொல்லும்போதே என் உள்ளம் வெடித்துவிடும் போலிருந்தது.

'நீர் வேறு சாதி, நான் வேறு சாதி என்று உலகம்கூறுகிறது.''

உலகம்! உலகம்! உலகம் கூறுகிறது! ஆனால் அந்த உலகில் கூடத்தான். சாதிகள் ஒன்று சேராமலே எவ்வளவு நாட்கள் தான் இருக்கமுடியும் கௌரி?'

'நான் அதைப்பற்றிக் கூறவில்லையே—'

'பின் எதைப் பற்றிக் கூறினாய்' என்று கேட்டேன். அவள் பதிலே கூறாமல், திரும்பிக்கூடப் பாராமல் வந்தவழியே மிதந்துபோகத் தொடங்கினாள்.

"கௌரி! கௌரி! என்னை விட்டு விட்டுப் போய்விடாதே நீ இல்லாமல் நான் இந்த உலகில் வாழமாட்டேன்!" என்று என்னால் முடிந்தவரை கத்தினேன். அவள் அதை காதில் வாங்கிக் கொள்ளாமலேயே போய்விட்டாள்.

* * *

"நான் வரும்போதே போகாதே என்று கூச்சல்போட ஆரம்பித்து விட்டீர்களே. ஏதாவது கனவு உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தீர்களா என்ன?" என்ற குரலைக் கேட்டுத் திரும்பினேன்.

கௌரி எதிரில் நின்றுகொண்டிருந்தாள். அவளுடைய கைகளைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டேன். அவள் கையில் வீணையுமில்லை ஒன்றுமில்லை. பாதி மலர்ந்தும் மலராததுமான ரோஜா மொட்டு தான் இருந்தது.

'கௌரி! அதை நீ ஏன் பறித்தாய்' என்றேன்.

"நான் பறிக்கவில்லை. அப்பா தான் அதை வைத்துக்கொண்டிருந்தார்" என்றாள்.

அதைக் கேட்டதும் என்னை அறியாமல் மனதில் சமூகத்தின் கொடுமையால் என் வாழ்க்கையும் மலராமலேயே கருகி விடுமோ—கௌரி என்னிடமிருந்து பறிக்கப்பட்டுவிடுவாளோ என்ற ஐயமும், தானே எழுந்தது. அதே சமயம், என் பகுத்தறிவு, 'அதெல்லாம் முட்டாள் தனமான எண்ணம். கட்டுப்பாடுகளையும் சமூகத் தடைகளையும் உடைத்தெறிந்து கொண்டே வாழ்க்கைப் பாதையில் முன்னேறுவதில் தான் இன்பம் இருக்கிறது; பெருமை இருக்கிறது' என்று கூறியது

கௌரி கேட்டாள் :—

"நன்றாய் வாசித்துக் கொண்டிருந்த ராகத்தை ஏன் சட்டென நிறுத்தினீர்கள்?"

"ஒளிந்திருந்து கேட்பது எல்லாத் திருடுகளையும்விட......" என்று நான் கூறத் தொடங்கும் போதே தன் கரங்களால் என் வாயைப் பொத்தினாள்.

அவளுடைய நிலாமுகத்தில் அந்தக் கருங் கூந்தலின் மயிர்ச் சுருள்கள் அங்குமிங்கும் பாய்ந்து பாய்ந்து விளையாடிய காட்சி மிகவும் அற்புதமாய் அமைந்திருந்தது.

"கௌரி, இன்றுதான் நான் கவிகளின் ஏடுகளில் எழுதப்பட்டிருந்த புனையாத சித்திரம் என்பதை நேரில் காண்கிறேன்—அதன் பொருள் இன்னது என்பதையும் தெளிவாக உணர்கிறேன். கருங்குவளை மலர் போன்ற கண்கள்......" என்று நான் சொல்ல எடுத்தேன். அதற்குள், "ஏதேது, நீங்கள் ஒரு இசைப் புலவர் என்று தான் நான் இதுவரை எண்ணியிருந்தேன். ஆனால் நீங்கள் ஒரு காவிய கர்த்தாவாகவும் இருக்கிறீர்கள் என்பது இப்போதுதான் எனக்குத் தெரிகிறது,' என்றாள் கௌரி.

எழில் வாய்ந்த முகத்தைக் காட்டிலும் அருமையான காவியம் வேறு இருக்கிறதா என்று நான் கேட்டேன்.

காவியத்தின் சிறப்பைவிட அதன் பொருளாழத்தை அறிவிக்கும் உரையாசிரியர் சிறப்பு பெரிதல்லவா என்றாள் அவள்.

பேசிக் கொண்டே இருந்தோம் நீண்ட நேரம், பிறகு உல்லாசபுரி சென்றோம்; உலவினோம் கொஞ்சம், அதற்குள் கீழிருந்து யாரோ கூப்பிடும் குரல் கேட்டு, மான்போல் துள்ளி ஓடி மறைந்துவிட்டாள் அவள்.

5

சாமிநாதனுக்குத் திருமணம் நடந்த பிறகு அவனுடைய மனைவி வீடுவந்து சேர்ந்தாள். முதலில் எங்களிடம் மிகவும் அன்பாகத்தான் நடந்து கொண்டாள். பிறகு வர வர என் மீதும் கௌரியின் மீதும் சந்தேகப் பார்வையைச் செலுத்த ஆரம்பித்தாள். கொஞ்ச நாளைக்கெல்லாம் அந்த சந்தேகப் பார்வையும் வெறுப்புப் பார்வையாக மாறத் தலைப்பட்டது.

முதலில் நாங்கள் பேசிக் கொண்டிருக்கும் சமயம் பார்த்து வீணை கனைத்துக் கொண்டும், ஏதோ வேலையிருப்பது போல அந்தப் பக்கமாக அடிக்கடி வருவதும் போவ
இருந்த அவள், கடை
வெளிப்படையாதவே
தைக் குறைவாகப் பேச
பித்து எங்கள் உள்ளத்தை
வும் புண்படுத்தினாள்.

அதே சமயத்தில் எப்
ஒரு முடிவிற்கு வரவேண்
அவசியம் என்பதையும்
கள் உணராமலில்லை.
எப்படி அதை அவ
அப்பாவிடம் கூறுவது
தில் தான் சங்கட
மிருந்தது. நான் கௌரி
"அதை"ப்பற்றி அவ
அப்பாவின் கருத்தை உ
படி தூண்டினேன்.
எனக்கு நானே என் கே
தனத்தை எண்ணி
னேன்.

(4-ம் பக்கம் பார்க்க

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoli
at Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B.A.